## பொருள் எண்.1

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான கிருமி நாசினிகள் இருப்பில் குறைவாக உள்ளதால் பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவையான கீழ்காணும் பொருட்கள் வாங்குவதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.300000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

1. பிளீச்சிங் பவுடர் – 3000 கிலோ
2. நீர்த்த சுண்ணாம்பு தூள் – 5000 கிலோ
3. பினாயில் – 1000 லிட்டர்

ந.க.எண்.1388/2019/எச்1

## தீர்மானம் எண்.2052 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.2

இந்நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் வடிகால் ஓடை மற்றும் மேல் மூடிகள் பழுதடைந்துள்ளதால், பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருவதாக புகார்கள் வரப்பெற்றதை தொடர்ந்து, பொது மக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள வடிகால் ஓடை மற்றும் மேல் மூடிகளை சீரமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.37/2019/இ1

## தீர்மானம் எண்.2053 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தினந்தோறும் சேகரமாகும் திடக்கழிவுகளை உரக்கிடங்கில் தினம் தோறும் சேகரிக்கப்படுவதால் இடம் பற்றாக்குறையாக உள்ளதால் JCB இயந்திரம் மூலம் மாதம்தோறும் ஓரமாக ஒதுக்கி வைத்து இடவசதி ஏற்படுத்தவும் சுகாதார கேடு ஏற்படாத வண்ணம் பராமரிக்கவும் ஒரு ஆண்டிற்கான உத்தேச செலவு தொகை ரூ. 25000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.998/2017/எச்1

## தீர்மானம் எண்.2054 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.4

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடைகள், கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகள், நவீன மீன் சந்தை கடைகள் மற்றும் கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை ஆகியவற்றிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தை 05.06.2019-ல் மாலை மலர் நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் ரூ.6300/- நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2035/2015/அ1

**தீர்மானம் எண்.2055 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.5

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் மற்றும் காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணம் கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம் ஆகிய இனங்களை துறை மூலம் வசூல் செய்வதற்கு ரசீது அச்சடிக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1831, நாள் 04.06.2018 –ன் படி உத்தேச செலவினம் ரூ.30,000/-க்கு மன்ற அனுமதி பெறப்பட்டது. ஆனால் 2018-19 ஆம் ஆண்டிற்கு மேற்காணும் இனங்களுக்கான ரெசீதுகள் தாசன் அச்சகம் குளச்சல் நிறுவனத்திடமிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் செலவினம் ரூ.39700/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.11062/2015/அ1

**தீர்மானம் எண்.2056 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.6

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன் படி திடக்கழிவுகள் உரிய முறையில் சேகரித்தல், பிரித்தல், கையாளுதல் செய்வதை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய அரசு கணக்கில் செலுத்த வேண்டிய தொகை ரூ.21000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2042/2015/எச்1

**தீர்மானம் எண்.2057 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.7

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள DBC பணியாளர்கள் சுய உதவிக்குழுக்கள் மூலம் பணியமர்த்த ஏப்ரல் 2019 முதல் ஜுன் 2019 வரை 89 நாட்களுக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2031 நாள் 08.03.2019-ல் ஒப்புதல் பெற்று பணியமர்த்தப்பட்டது. மேலும் 17 DBC பணியாளர்களை ஜுலை 2019 முதல் செப்டம்பர் 2019 வரை 89 நாட்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ2/194/2016 நாள் 11.02.2018-ல் தெரிவித்துள்ள தினக்கூலி பட்டியலின்படி 89 நாட்களுக்கு கால நீட்டி செய்யவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.380000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1182/2017/எச்1

## தீர்மானம் எண்.2058 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.8

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மினி ஆட்டோ எண்.TN-75-P-8399-ன் தகுதி சான்று புதுப்பித்தல் பணிகள் சரி செய்வதற்கு உத்தேச செலவு தொகைக்கு இந்நகர் மன்ற தீர்மனாம் எண்.2044 நாள் 31.05.2019-ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ள கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s. கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் வடசேரி | மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s. அக்சையா மோட்டார்ஸ் உண்ணாமலைக்கடை | மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள M/s.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், வடசேரி நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1406/2014/எச்1

## தீர்மானம் எண்.2059 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.9

இந்நகராட்சி பகுதியில் உள்ள வீடுகளில் குப்பைகள் தரம் பிரித்து வாங்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் 15 துப்புரவு பணியாளர் பைரவி பவுண்டேசன் நாகர்கோவில் நிறுவனத்தின் மூலம் 01.08.2018 முதல் 31.07.2019 வரை ஒரு ஆண்டிற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1860 நாள் 27.06.2018-ல் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 31.07.2019-ல் பணிக்காலம் முடிவடைவதால் மேலும் ஒரு ஆண்டிற்கு நாள் ஒன்றிற்கு ஒரு நபருக்கு ரூ.465/- வீதம் பணிக்கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.2600000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.212/2018/எச்1

**தீர்மானம் எண்.2060 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.10

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் உரக்கிடங்கில் குப்பைகளை தரம்பிரித்து உரம் தயாரிக்கும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர் 15 பேர் பைரவி பவுண்டேசன் நாகர்கோவில் நிறுவனத்தின் மூலம் 01.08.2018 முதல் 31.07.2019 வரை ஒரு ஆண்டிற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1861 நாள் 27.06.2018-ல் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 31.07.2019-ல் பணிக்காலம் முடிவடைவதால், மேலும் ஒரு ஆண்டிற்கு நாள் ஒன்றிற்கு ஒரு நபருக்கு ரூ.465/- வீதம் பணிக்காலம் நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.2600000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.212/2018/எச்1

**தீர்மானம் எண்.2061 அங்கீகரிக்கப்பட்டது**

## பொருள் எண்.11

இந்நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கடைகள் குத்தகைக்கு எடுத்து வைப்பு தொகை செலுத்தியது. தற்போது மறு ஏலத்தில் வேறு நபர்கள் குத்தகைக்கு எடுத்துள்ளதால் கீழ்காணும் குத்தகைதாரர்களுக்கு வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை கணக்கில் இருப்பில் உள்ளதால் சம்மந்தப்பட்ட குத்தகைதாரர் வைப்பு தொகையினை திரும்ப வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| வ. எண் | குத்தகைதாரர் பெயர் | இருப்பில் உள்ள வைப்புத் தொகை |
|---|---|---|
| 1 | தார்ச்சீஸ் | ரூ.47000/- |
| 2 | கிளாடி | ரூ.14279/- |
| 3 | ஞானசேகர் | ரூ.23820/- |
| 4 | முருகேசன் | ரூ.12088/- |
| 5 | ஷாகுல் அமீது | ரூ.22000/- |
| 6 | பால்தாஸ் | ரூ.25000/- |

ந.க.எண்.998/2018/பி1

## தீர்மானம் எண்.2062 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.12

இந்நகராட்சிக்குட்பட்ட டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தின் கடை எண்கள் முதல் தளம் 33 முதல் 37 மற்றும் 60 முதல் 64 ஆகியவற்றில் இயங்கி வரும் தொலைபேசி நிலைய அலுவலகத்தின் குத்தகை உரிமம் 30.06.2018 டன் 9 ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. மேற்படி கடைகளுக்கு மாத வாடகையாக ரூ.6463/- செலுத்தப்பட்டு வருகிறது. தொலைபேசி நிலைய அலுவலகத்தை பொது மக்கள் எளிதில் அணுகும் வகையில் மேற்காணும் கடைகள் தொலைபேசி நிலைய அலுவலக பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளதால் பொது மக்கள் நலன் கருதி கடை எண்கள் 33 முதல் 37 மற்றும் 60 முதல் 64 ஆகிய 10 கடைகளுக்கு 01.07.2018 முதல் 30.06.2021 வரை மேலும் 3 ஆண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு செய்வதற்கும்,தற்போதைய மாத வாடகையில் 15% வாடகை உயர்வு செய்யவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடை எண் | வரிவிதிப்பு எண் | வாடகைதாரர் பெயர் | தற்போதைய வாடகை | 15% உயர்வு செய்த பின்னர் வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | 33 முதல் 37 மற்றும் 60 முதல் 64 | 148/2009006 | தொலைபேசி நிலையம் | 6463/- | 7432/- |

ந.க.எண்.4430/2007/அ1

## தீர்மானம் எண்.2063 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.13

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண்.7-ல் இயங்கி வரும் காதிகிராப்ட் கடையின் குத்தகை உரிமம் 31.03.2018 டன் 9 ஆண்டுகளும் மற்றும் தீயணைப்பு நிலைய கடை எண்கள் 9,38 ஆகியவற்றின் குத்தகை உரிமம் 31.03.2018 டன் 9 ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. மேற்படி கடைகளுக்கு பொது மக்கள் எளிதில் அணுகும் வகையில் அலுவலக பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளதால் பொது மக்கள் நலன் கருதி 01.04.2018 முதல் 31.03.2021 வரை 3 ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்வதற்கும், தற்போதைய மாதவாடகையில் 15% வாடகை உயர்வு செய்யவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடை எண் | வரிவிதிப்பு எண் | வாடகைதாரர் பெயர் | தற்போதைய வாடகை | 15% உயர்வு செய்த பின்னர் மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | 7 | 148/20050300 | காதி கிராப்ட் | 2648 | 3045/- |
| 2 | 9 | 148/2005008 | தீயணைப்பு நிலையம் | 4046 | 4653/- |
| 3 | 10 | 148/2005031 | தீயணைப்பு ஊர்தி | 2574 | 2960/- |

ந.க.எண்.2035/2015/அ1

### தீர்மானம் எண்.2064 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.14

இந்நகராட்சியில் உலக சுற்றுச்சூழல் தினம் 05.06.2019 அன்று பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பேரணி மற்றும் மரக்கன்று நடும் நிகழ்விற்கு மரக்கன்றுகள் வாங்கியது மற்றும் பிளஸ் அடித்தது, இதர செலவுகள் சேர்த்து ரூ.1580/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.620/2019/எச்1

### தீர்மானம் எண்.2065 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.15

இந்நகராட்சியில் தற்போது குடிநீர் பிரிவிற்கு தேவைப்படும் பொருட்கள் இருப்பு குறைவாக இருப்பதால் குடிநீரின் அவசர அவசியம் கருதி கீழ்கண்ட பொருட்களை வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8,60,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குடிநீர் பிரிவு பராமரிப்பு பணிக்கு தேவைப்படும் பொருட்கள்

1. 3 Phase Panel Board – 5 Nos
2. 10 HP submersible Pumpset – 6 Nos
3. 3” Sluice valve – 10 Nos
4. 4” Sluice valve – 5 Nos
5. 4” Air valve – 2 Nos
6. 4 sqmm cable wire – 750 mt
7. 6” sluice valve – 4 Nos.

ந.க.எண்.721/2019/இ2

## தீர்மானம் எண்.2066 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.16

இந்நகராட்சிக்குட்பட்ட கே.எஸ்.எஸ்.எஸ் காலனி மற்றும் வெள்ளிப்பிள்ளையார் கோவில் ஆகிய இரண்டு இடங்களில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் (Bore No.16,23) உள்ள தண்ணீரின் சுவை மாறுதலாக உள்ளதாலும் பொதுமக்களின் புகாரின் அடிப்படையிலும், பாலத்தன்கரையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (2018-19)-ன் கீழ் புதியதாக இரண்டு எண்ணம் ஆழ்துளை கிணறுகள் நிறுவப்பட்டு மின் மோட்டார்கள் இறக்கும் பணியும் முடிவடைந்து உள்ளது. எனவே குடிநீரின் அவசர அவசியம் கருதி சுகாதாரமான குடிநீர் வழங்க ஏற்கனவே உள்ள இரண்டு ஆழ்துணை கிணறுகளை (Bore No.16,23) Plug செய்து விட்டு தற்போது பாலத்தன்கரையில் நிறுவப்பட்டுள்ள இரண்டு ஆழ்துளை கிணறுகளை (Bore No.31,32) ஏற்கனவே உள்ள பிரதான குழாயுடன் இணைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.90,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.722/2019/இ2

## தீர்மானம் எண்.2067 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.17

இந்நகராட்சி குடிநீர் லாரி TN 74 Z 5304 –ல் ரூ.58,000/- மதிப்பீட்டில் பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்வதற்கு, குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி, 18.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s.Akshaya Motors, Unnamalaikadai | மதிப்பீட்டை விட 0.92% அதிகம் (ரூ.49150/-) |
| 2 | M/s.Ganesh Motor Works, Nagercoil. | மதிப்பீட்டு விகிதம் (ரூ.48,700/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Ganesh Motor Works,Nagercoil நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும், குடிநீர் பணிகளின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், மேற்படி பணிக்கான உத்தேச செலவினம் ரூ.58,000/-ஐ குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.5754/2010/இ1

## தீர்மானம் எண்.2068 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.18

இந்நகராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்: 2018-19-ன் கீழ், ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள இலப்பவிளை அரசு உயர்நிலைப்பள்ளியில் வகுப்பறை கட்டுதல் பணிக்கு 14.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்ததால், மேற்படி நடத்தை விதிகள் தளர்த்தப்பட்ட பின்னர் கடந்த 04.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டது. அதன் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.ஜாண்றோஸ், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.03% குறைவு (ரூ.12,31,272.25/-) |
| 2 | திரு.சி.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.14% அதிகம் (ரூ.12,33,497/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ். ஜாண்றோஸ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.03% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.208-

1/2019/இ1

## தீர்மானம் எண்.2069 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.19

இந்நகராட்சியில் மேலாளருக்கு தனியறை அமைத்து, கணினி மற்றும் குளிர்சாதன வசதிகள் செய்தல் பணியினை ரூ.1,25,000/-மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் தனது தீர்மானம் எண்.2028 நாள் 08.03.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 18.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 13.83% அதிகம் (ரூ.133414/-) |
| 2 | திரு.எஸ்.சத்தியதாஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு (ரூ.117187.24/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.சத்தியதாஸ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.335-

1/2019/இ1

## தீர்மானம் எண்.2070 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.20

இந்நகராட்சிக்குட்பட்ட களிமார், முன்டன்பிலாவடி குறுக்கு சாலையில் பேவர் பிளாக் அமைத்தல் பணியினை ரூ.2,60,000/- மதிப்பீட்டில், நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு, மன்றம் தனது தீர்மானம் எண்.2002 நாள் 18.02.2019-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு, 18.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 10.66% அதிகம் (ரூ.2,33,330/-) |
| 2 | திரு.எஸ்.சத்தியதாஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு (ரூ.2,10,812/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.சத்தியதாஸ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1822/2018/இ1

## தீர்மானம் எண்.2071 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.21

இந்நகராட்சிக்கு ஆணையர் அறையில் கழிவறை பயன்பாட்டிற்காக 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி அமைத்தல் பணியினை ரூ.14,000/- மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும், மேற்படி பணியினை குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.1969 நாள் 31.12.2018-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணியினை மேற்கொள்ள, 18.06.2019 அன்று பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.சத்தியதாஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.87% அதிகம் (ரூ.12,035/-) |
| 2 | திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு (ரூ.11,790/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.20% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1784/2018/இ1

## தீர்மானம் எண்.2072 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.22

இந்நகராட்சி குடிநீரேற்று நிலையங்கள் மற்றும் அலுவலக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள 4 எண்ணம் ஜெனரேட்டர்களின் 2019-20 ஆம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,75,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.1973 நாள் 31.12.2018-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 18.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s.Annai Generators, Nagercoil | மதிப்பீட்டை விட 5.68% அதிகம் (ரூ.1,72,000/-) |
| 2 | M/s.RJ.Power, Marthandam | மதிப்பீட்டை விட 0.06% குறைவு (ரூ.1,62,650/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.RJ.Power, Marthandam நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.567/2017/இ2

## தீர்மானம் எண்.2073 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.23

இந்நகராட்சியில், பொறியியல், பொது சுகாதாரம், பொது பிரிவு மற்றும் ஆணையர் அறையில் வயரிங் மற்றும் கேபிள் (Network Cable) வசதிகளை ரூ.1,20,000/-மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் தனது தீர்மானம் எண்.1968 நாள் 31.12.2018-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 18.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s.Annai Generators, Nagercoil | மதிப்பீட்டை விட 8.05% அதிகம் (ரூ.74,600/-) |
| 2 | M/s.RJ.Power, Marthandam | மதிப்பீட்டை விட 0.01% குறைவு (ரூ.69,030/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.RJ.Power, Marthandam நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1772-1/2018/இ1

## தீர்மானம் எண்.2074 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.24

இந்நகராட்சி குடிநீர் விநியோகத்திற்காக பயன்பாட்டில் உள்ள 21 எண்ணம் ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளையும் Fuse Carrier, Service wire, panel Board, Main Switch & Inner wiring ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளையும் உடனுக்குடன் சரி செய்து அனைத்து பகுதிகளுக்கும் சீரான முறையில் குடிநீர் வழங்கும் பொருட்டு, 2019-20 ஆம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.4,00,000/- க்கும், மேற்படி பணியினை குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.188/2019/இ2

## தீர்மானம் எண்.2075 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.25

இந்நகராட்சி குடிநீர் விநியோகத்திற்காக பதிக்கப்பட்டுள்ள 63.72 கி.மீ பகிர்மான குழாயும், 19.26 கி.மீ பிரதான குழாயும் பதிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டதால், அடிக்கடி உடைவு ஏற்பட்டு குடிநீர் விநியோகம் தடைபட்டு வருகிறது. மேலும் நகராட்சியில் 4700 க்கு மேல் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், குடிநீர் குழாய்களில் அடிக்கடி உடைவு ஏற்படுவதால், நகராட்சி குடிநீரை மட்டும் நம்பி உள்ள பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க இயலவில்லை. எனவே பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு ஏதுவாக குடிநீர் விநியோக வால்வுகள், பகிர்மான குழாய், பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கு 2019-20 ஆம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகளை ரூ.6,00,000/- மதிப்பீட்டில், நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.189/2019/இ2

## தீர்மானம் எண்.2076 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.26

இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான்கரை பகுதி பொது மக்களுக்கு, நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 7.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை

நீர்த்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி வினியோகத்திற்காக அலுவலக வளாகத்திலிருந்து பயணியர் விடுதி வரை 5" PVC பகிர்மான குழாயும், பயணியர் விடுதி முதல் வெள்ளியாகுளம் வரை 3" PVC பகிர்மான குழாய் மூலம் சீரான குடிநீர் வினியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி, பயணியர் விடுதி முதல் வெள்ளியாகுளம் வரை தற்போது பதிக்கப்பட்டுள்ள 3" PVC பகிர்மான குழாயினை மாற்றி 4" PVC பகிர்மான குழாய் பதிக்கும் பணியினை ரூ.6,00,000/- மதிப்பீட்டில், நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.720/2019/இ1

**தீர்மானம் எண்.2077 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.27**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4-ல் ஆசாத் நகர் குறுக்கு தெரு மழைநீர் வடிகால் ஓடையின் மேல் மூடிகள் ஆங்காங்கே உடைந்து கழிவுநீர் வடிகால் ஓடையில் செல்லாமல் தேங்கி உள்ளதாலும், மேற்படி குறுக்கு தெரு பள்ளமாக உள்ளதாலும், மழைக்காலங்களில் சாலையில் செல்லும் மழைநீர் குறுக்கு தெருவில் பாய்ந்து சேறும் சகதியுமாக சாலை மிக மோசமாக சேதமடைந்துள்ளது. இதனால் போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே பொது நலனை கருத்தில் கொண்டு, மழைநீர் வடிகால் ஓடையில் உடைந்த மேல்மூடிகளை சரி செய்து, பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை ரூ.3,25,000/- மதிப்பீட்டில், நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.810/2019/இ1

**தீர்மானம் எண்.2078 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.28**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கொசுபுழு ஒழிப்பிற்கு தேவையான மருந்துகள் வாங்குவதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.3,00,000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1388/2019/எச்1

**தீர்மானம் எண்.2079 அங்கீகரிக்கப்பட்டது**